விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 1340/ஆ4/2022 நாள்: 21 ,03.2024

பொருள் : உள்ளூர் விடுமுறை – விழுப்புரம் மாவட்டம் - மேல்மலையனூர் வட்டம் – அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் மாசி மாத பிரம்மோற்சவம் 08.03.2024 முதல் 20.03.2024 வரை நடைபெறுவது – 14.03.2024 (வியாழன் கிழமை) திருத்தேர் உற்சவம் அன்று உள்ளூர் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது – உள்ளூர் விடுமுறையினை ஈடு செய்யும் தேதி 23.03.2024 மாற்றம் செய்து 30.03.2024 அன்று பணிநாளாக அறிவித்தல் – தொடர்பாக.

www.Padasalai.Net

பார்வை : 1. விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். அ3/20151265 - Colr - 9493/ 2024 நாள்: 20.03.2024

2. இந்து சமய அறநிலையத்துறை அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் மேல்மலையனூர் நகர் (ம) வட்டம். வழுப்புரம் மாவட்டம் உதவி ஆணையர் / செயல் அலுவலர் அவர்களின் கடிதம். ந.க.எண். 11/2024/அ1/ நாள்: 19.02.2024

3. அரசாணை (நிலை) எண் . 57 .பொது (பல்வகை) துறை நாள்: 11.01.2010

................................

பார்வை 1-ல் காணும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகளின்படி, விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் மற்றும் நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவிலில் 08.03.2024 முதல் 20.03.2024 வரை நடைபெறும் மாசி மாத பிரம்மோற்சவத்தினையொட்டி 14.03.2024 ( வியாழன் கிழமை) அன்று நடைபெறும் , திருத்தேர் உற்சவத்தன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அனுமதியின்படி 14.03.2024 (வியாழன் கிழமை) அன்று உள்ளூர் விடுமுறை அளித்தும் மேற்படி உள்ளூர் விடுமுறையினை ஈடு செய்யும் பொருட்டு விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் 23.03.2024 (சனிக்கிழமை) அன்று பணிநாளாக வழக்கம் போல் செயல்பட உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நேர்வில் நிர்வாக காரணங்களுக்காக, 23.03.2024 (சனிக்கிழமை) அன்று உள்ளூர் விடுமுறையினை ஈடு செய்யும் பொருட்டு பணிநாளாக உத்தரவிடப்பட்டதை ரத்து செய்து **30.03.2024 (சனிக்கிழமை)** அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் செயல்பட உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை பள்ளிகளுக்கும் **30.03.2024 சனிக்கிழமை** அன்று பணி நாளாக வழக்கம் போல் செயல்பட உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு :

மாவட்ட ஆட்சியரின் கடித நகல்

முதன்மைக்கல்வி அலுவலர்

விழுப்புரம்.

பெறுதல்:

அனைத்து வகை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், - விழுப்புரம் மாவட்டம்

நகல்:

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) விழுப்புரம்/திண்டிவனம்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்க நிலை) – விழுப்புரம் / திண்டிவனம்
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) – விழுப்புரம்.

(தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்துவகை பள்ளிகளுக்கும் தகவல் தெரிவிக்கும் பொருட்டு)

Scanned with OKEN Scanner